செ.வெ.எண்: 29 நாள்: 24.07.2020

# அரியலூர் மாவட்டத்தில் நடந்து முடிந்த 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவிகளுக்கு மதிப்பெண் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் நிர்மலா பெண் மேல்நிலைப்பள்ளியில் நடந்து முடிந்த 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவிகளுக்கு தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (24.07.2020) வழங்கி, தொடங்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்று முடிந்த பனிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு மார்ச் 2020ன் தேர்வு முடிவுகள் 16.07.2020ல் தமிழக அரசின், பள்ளிக்கல்வி தேர்வுதுறையால் வெளியிடப்பட்டது.

இதில் மாநில அளவில் அரியலூர் மாவட்டம் 14வது இடத்தையும், இதில் 8143 மாணவ மாணவிகள் (ஆண்கள் 3561 + பெண்கள் 4582) தேர்வு எழுதி 7688 மாணவ - மாணவிகள் (3307 + 4381) தேர்ச்சி பெற்று 94.41% தேர்ச்சி பெற்றது, இன்று அரசு தேர்வு துறை, பனிரெண்டாம் வகுப்பு மாணவ - மாணவிகளுக்கு தற்காலிக மதிப்பெண் சான்றிதழை வெளியிடப்பட்டது. 30.07.2020க்குள் அனைத்து தேர்ச்சி பெற்ற மாணவ / மாணவிகளும் அவரவர் படித்த பள்ளிக்கு வருகைப்புரிந்து தற்காலிக மதிப்பெண் சான்றிதழை பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும் அரியலூர் நிர்மலா பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயின்ற 25 மாணவிகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. அரியலூர் நிர்மலா பெண்கள் மேல்நிலைப்பள்ளி 540 மாணவிகள் தேர்வு எழுதி, 539 மாணவிகள் தேர்ச்சி பெற்று 99.8% தேர்ச்சி சதவீதத்தை பெற்றுள்ளது. தேர்ச்சி பெற்ற மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் வாழ்த்து தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சி.முத்துகிருஷ்ணன், நேர்முக உதவியார் காமராஜ், பள்ளி ஆய்வாளர் இரா.பழனிசாமி, பள்ளி தலைமை ஆசிரியர் இசபெல்லாமேரி மற்றும் ஆசிரியர்கள், மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**